சார்பு நீதிமன்றம், பரமத்தி.
முன்னிலை திரு.எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ஆம் நாள் வியாழக்கிழமை

<u>வ.ம.எண்.9/2025 இன் அசல் வழக்கு எண். 409/2018</u>

1. உமாபதி
2. திலகவதி ... மனுதாரர்கள்/வாதிகள்

எதிராக

1. மாலதி
2. கிருபாவதி
3. பூங்கொடி
4. சரஸ்வதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, 04.03.2026–ஆம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம். கலைவாணன் அவர்கள் ஆஜராகியும், 1, 2–எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சக்ரவர்த்தி அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டும், 3, 4–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எ.செந்தில் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது, 1–ம் பிரதிவாதி, 4–ம் பிரதிவாதிக்கு கடந்த 21.11.2022– தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 4422/2022–என்ற எண்ணுள்ள கிரைய பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளது செல்லாது என விளம்புகை கோரி திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளித்த உத்தரவாகவேண்டி, கட்டளை 6, விதி 17–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுச்சுருக்கம்</u>

மேற்படி மனுவில் மனுதாரர், 1–ம் மனுதாரர். அசல் வழக்கில் 1–ம் வாதி. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது டிக்ளரேஷன்கள் மற்றும் பாகப்பிரிவினை கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த தாவாவில் 4–ம் பிரதிவாதிக்கு, 1–ம் பிரதிவாதி கடந்த 21.11.2022 தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி வழக்கானது 2018–ம் ஆண்டிலிருந்து 1–ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து வழக்கு நடந்து வரும் நிலையில், 1–ம் பிரதிவாதி மேற்படி தாவா சொத்தும் பிராதின் சொத்து விவரத்தில் 2–வது ஐட்டமாக சேர்க்கப்பட்டிருந்த நிலையிலும், 1–ம் பிரதிவாதி வேண்டுமென்றே 4–ம் பிரதிவாதிக்கு 2–வது ஐட்டம் சொத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார். இந்த கிரயமானது வாதிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது. எனவே தான், வாதிகள் மேற்படி தேதியில் 1–ம் பிரதிவாதி கடந்த 21.11.2022 தேதியில் 4422/2022 என்ற எண்ணில் எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் செல்லாது என டிக்ளரேஷன் கோரி தாவா பிராதில் 5–வது பரிகாரமாக சேர்த்து திருத்தம் செய்து கொள்ளவும் சி.பி.சி. ஆர்டர் 6 ரூல் 17ன் படியான மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி பரிகாரத்திற்கு உண்டான நீதிமன்ற முத்திரை கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளது. எனவே நீதிமன்றம் இம்மனுவை ஏற்று, 1–ம் பிரதிவாதி, 4–ம் பிரதிவாதிக்கு, கடந்த 21.11.2022 தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 4422/2022 என்ற எண்ணுள்ள கிரய பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளது செல்லாது என டிக்ளரேஷன் கோரி திருத்தம் செய்து கொள்ள அனுமதி கோரும் இம்மனுவை ஏற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. இல்லையெனில், 1–ம் மனுதாரர்/1–ம் வாதிக்கு மிகுந்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும். ஆகையால், 1–ம் பிரதிவாதி, 4–ம் பிரதிவாதிக்கு கடந்த 21.11.2022 தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 4422/2022 என்ற எண்ணுள்ள கிரய பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளது செல்லாது என டிக்ளரேஷன் கோரி திருத்தம் செய்து கொள்ள அனுமதி கோரும் இம்மனுவை ஏற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும். எனவே, 1–ம் பிரதிவாதி, 4–ம் பிரதிவாதிக்கு கடந்த 21.11.2022– தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 4422/2022–என்ற எண்ணுள்ள கிரைய பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளது செல்லாது என விளம்புகை கோரி

திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளித்த உத்தரவாகவேண்டி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 4–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 3–ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரைச்சுருக்கம்,

மனுதாரர் மனு பொய்யும், மோசடியுமானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாகத்தள்ளுபடியாகத்தக்கது. இதில் வியக்தமாய் ஒப்புக்கொண்ட அம்சங்களைத்தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். மனுச்சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. 4–ம் பிரதிவாதி கடந்த 21.11.2022 தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 4422/2022 மூலம் 1–ம் பிரதிவாதியிட மிருந்து கிரயம் பெற்றதால் 4–ம் பிரதிவாதியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்த I.A.NO.2/2023 மனுவில் இந்த எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரைக்கு பின் இரு தரப்பு விசாரணைக்கு பின்னர் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் 4–ம் பிரதிவாதி இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டார். ஆனால் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்த மேற்படி I.A.NO.2/2023 மனு அபிடவிட்டில் 4–ம் பிரதிவாதி கடந்த 21.11.2022 தேதியில் ஆவண எண்.4422/2022 படி கிரயம் பெற்ற சொத்திற்கும், இவ்வழக்கிற்கும் என்ன சம்பந்தம் என்று தெரிவிக்காமல் வெறுமெனே பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ததால் அது குறித்து இவ்வழக்கிற்கு 4–ம் பிரதிவாதி தேவையற்ற தரப்பினர் என எதிருரையில் தெரிவித்து இருந்தும் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் வழக்கு பிராது திருத்தம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில், 1–ம் வாதி சாட்சிய நிரூபணம் வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஏதோ வாதிகளுக்கு ஏற்பட்ட உயிர் ஆவணத்தையும் மற்றும் பட்டாவையும் 1–ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஒப்படைக்க கோரி தாக்கல் செய்த I.A.NO. 6/2025 மனு இரு தரப்பு விசாரணைக்கு பின்னர் கடந்த 25.08.2025 ஆம் தேதியில் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 1–ம் வாதி மேற்படி உயில் ஆவணத்தையும் மற்றும் பட்டாவையும் நீதிமன்றத்தில் கடந்த 06.10.2025 தேதியில் தாக்கல் செய்து அது வா.சா.ஆ7 மற்றும்

வா.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்பட்டு, முதல் சாட்சியும் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக 13.10.2025, 27.10.2025, 4.11.2025 தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது. பின் குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராவதை தவிர்த்து வந்து பின் ஏதோ தாவா பரிகார காலத்தில் 4–ம் பிரதிவாதிக்கு கடந்த 21.11.2022 தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 4422/2022 என்ற எண்ணில் ஏற்பட்ட கிரய பத்திரத்தை செல்லாது என டிக்ளரேஷன் கோரி திருத்தம் செய்ய வேண்டி அனுமதி கோரி தாக்கல் செய்திருக்கும் இம்மனு தள்ளுபடியாக வேண்டிய ஒன்றாகும். 4–ம் பிரதிவாதி கடந்த 21.11.2022 தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 4422/2022 மூலம் 1–ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்றதால் 4–ம் பிரதிவாதியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்த I.A.NO.2/2023 மனுவில் இந்த எதிர்மனுதாரர் என்ன காரணத்திற்காக தரப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என அம்மனு பிரமாண வாக்கு மூலத்தில் தெரிவிக்காததால் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரையில் தெரிவிக்கப்பட்டு இருந்தும் அம்மனு 10.04.2024 தேதியில் அனுமதிக்கப்பட்டது. பின்னர் தாவா பிராதை வாதிகள் திருத்தம் செய்துவிட்டு தற்போது வழக்கை நடத்தாமல் இழுத்தடிக்க வேண்டிய மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் வாதிகள் வழக்கு பரிகார காலத்தை திருத்தம் செய்ய வேண்டும் என தெரிவித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். 4ம்பிரதிவாதி கடந்த 21.11.2022 தேதியில் வேலூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 4422/2022 மூலம் 1–ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்று மூன்று ஆண்டுகளுக்கு மேல் உள்ளதால் வாதிகள் கூறும் டிக்ளரேஷன் பரிகாரம் கால வரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் தாவாவில் 4–ம் பிரதிவாதியின் கிரய ஆவணம் குறித்து பரிகாரம் கோர இயலாது என்பதால் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகும். ஆகவே, மனுதாரரின் இந்த மனுவை 4–ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் 3, 4–எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் எதுவும் முன்னிடவில்லை.

5. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் கூறியுள்ள காரணங்களை ஏற்று, இந்த மனு அனுமதிக்கக்கூடியதா என்பதாகும்.

6. <u>தீர்வு</u>

இம்மனுவானது, தாவா சொத்து சம்பந்தமாக 4–ம் பிரதிவாதி பெற்ற கிரையப்பத்திரம் செல்லாது என்று அசல் வழக்கில் திருத்தம் செய்யவேண்டும் என்று கோரி, தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இரு தரப்பு வாதங்களும் ஆவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

8. மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், தாவா 2–ம் அயிட்ட சொத்தை, 1–ம் பிரதிவாதி, 4–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும் அதனால், 4–ம் பிரதிவாதி பெற்ற கிரையப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யவேண்டும் என்று அசல் வழக்கில் திருத்தம் செய்யவேண்டும் என்றும் அதனால், மனுவில் கூறியுள்ள மேற்படி சங்கதிகள் குறித்து அசல் வழக்கில் திருத்தம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

9. 3, 4–எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், 4–ம் பிரதிவாதி கடந்த 21.11.2022–தேதியில், 1–ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றதால் அவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று கோரி, ஐ.எ.எண். 2/2023–மனுவை இம்மனுதாரர் தாக்கல் செய்தார் என்றும் மேற்படி மனுவில் ஆட்சேபணை செய்தும், மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கில் 4–ம் பிரதிவாதி சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் மேற்படி மனுவில் 4–ம் பிரதிவாதியை எதற்கு சேர்க்க வேண்டும் என்றும் குறிப்பிடவில்லை என்றும் 4–ம் பிரதிவாதி கடந்த

21.11.2022–தேதியில் 1–ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்று, 3–ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது என்றும் அதனால், 4–ம் பிரதிவாதி பெற்ற கிரையப்பத்திரம் குறித்து விளம்புகை பரிகாரம் கோரி, அசல் வழக்கை உரிய காலத்தில் திருத்தம் செய்ய பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யாததால், இம்மனு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அதனால், இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

10. மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். அசல் வழக்கு பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது. இந்நிலையில், மனுதாரர்கள் தரப்பில் 4–ம் பிரதிவாதி பெற்ற கிரையப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யவேண்டும் என்று அசல் வழக்கில் திருத்தம் செய்யவேண்டும் என்று கோரி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. மனுதாரர்கள் தரப்பில், தாவா 2–ம் அயிட்ட சொத்து குறித்து கடந்த 21.11.2022–தேதியில் 1–ம் பிரதிவாதியிடமிருந்து, 4–ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை 3, 4–எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்யவில்லை. ஆகவே, 4–ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கு கடந்த 2018–ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், கடந்த 2022–ம் ஆண்டு தாவா 2–ம் அயிட்ட சொத்தை கிரையம் பெற்றுள்ளது தெரிய வருகிறது. எனவே, அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது, 4–ம் பிரதிவாதி தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ளதால், அதை குறித்து ஆட்சேபணை செய்ய இம்மனுதாரர்களுக்கு உரிமையுள்ளது. அதனால், 4–ம் எதிர்மனுதாரர் பெற்ற கிரையம் குறித்து பரிகாரம் கோர அசல் வழக்கை திருத்தம் செய்யவேண்டும் என்று இம்மனுவை தாக்கல் செய்வதற்கும் மனுதாரர்களுக்கு உரிமையுள்ளது. ஆனால், 3, 4–எதிர்மனுதாரர்கள் தரப்பில் 4–ம் எதிர்மனுதாரர் கடந்த 21.11.2022–தேதியில் கிரையம் பெற்றார் என்றும் அதனால், 3–ஆண்டுகளுக்குள் மேற்படி கிரையம் குறித்து ஆட்சேபணை செய்து, அசல் வழக்கில் திருத்தம் செய்ய

இம்மனுவை உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யவில்லை என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

12. 3, 4–எதிர்மனுதாரர்களின் மேற்படி ஆட்சேபணையை பரிசீலிக்கையில், அசல் வழக்கில் 4–ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று கோரி இம்மனுதாரர் கடந்த 2023–தேதியில் தான் ஐ.எ.எண். 2/2023–மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கில் 4–ம் பிரதிவாதி சேர்க்கப்பட்டுள்ளார். அதன் தொடர்ச்சியாக மனுதாரர், இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். 3, 4–எதிர்மனுதாரர்கள் தரப்பில் 4–ம் பிரதிவாதி கடந்த 21.11.2022–தேதியில் பெற்ற கிரையப்பத்திரம் குறித்து இம்மனுதாரர்களுக்கு அப்போதே தெரியும் என்று ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. இந்நிலையில், மேற்படி ஆவணம் குறித்து மனுதாரர்களுக்கு தெரிந்த நாளிலிருந்து தான், காலவரையறை தொடங்கும். அதனடிப்படையில் பார்க்கும்போது, மனுதாரர்கள் ஐ.எ.எண்.2/2023–மனுவை 2023–ல் தாக்கல் செய்துள்ளார்கள். அதிலிருந்து, 2–வருட காலத்திற்குள் இம்மனுவை 2025–ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளார்கள். அதனால், இம்மனு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இம்மனு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட வில்லை என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், மேற்படி பரிசீலனைகளின் முடிவில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 12.03.2026–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.03.12 19:16:10 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>மனுதாரர் மற்றும் 3, 4–எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>

இல்லை.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR Date: 2026.03.12 19:16:15 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி